1975 அக்டோபர் 24]

விற்கப்படுகின்றன. கடந்த 6, 7 ஆண்டுகளில் தமிழ் நாட்டில்தான் காசநோய் வில்லைகள் அதிகம் விற்பனை செய்யப்பட்டு, அகில இந்தியாவிலேயே முதலிடத்தை தொடர்ந்து வகித்து வருகின்றது. காசநோய் வில்லைகள் விற்பனை மாவட்ட வாரியாகப் பார்க்கப்போனால் ஒரு மாவட்டத்தில் 50,000 ரூபாய், இன்னொன்றில் 1½ லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு இருக்கிறது. அதன்மூலம் கிடைக்கின்ற பணத்தில் 10 சதவிகிதம் தவிர, மீதி அந்தந்த மாவட்டங்களிலேயே காசநோய் தடுப்புப் பணிக்காகச் செலவிடப்படுகிறது.

காசநோய் அளவுக்குத் தொழுநோயும் முக்கியமாகத் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தபோதிலும் அந்த அளவுக்கு இடம் பெறவில்லை. ஆனால் தொழுநோயாளிகளைப் பராமரிக்கத் தனியார் இல்லங்கள் பரவலாக இருக்கின்றன. கிறிஸ்தவ பாதிரிமார்கள் அந்தத் தொண்டில் சிறந்து விளங்குகிறார்கள். கிறிஸ்தவ பாதிரிமார்கள் என்று சொல்லும்போது அவர்கள் பிரச்சாரத்திற்காக இத்தகைய இல்லங்களை நடத்துகிறார்கள் என்று சொல்லவில்லை; சில இடங்களில் 2, 3 சகோதரிகளை வைத்து இத்தகைய தொண்டு இல்லங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமும் அத்தகைய இல்லங்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச்சார உதவித் தொகை வழங்கி, ஆதரவு காட்டி வருகிறது. அதேநேரத்தில் பிச்சை எடுக்கும் தொழு நோயாளிகளைப் பராமரிக்க அரசாங்கம் பத்து மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அவைகளில் ஏறத்தாழ 4,000 பேர் தங்கியிருக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனியாக நன்கொடை வசூலித்து இத்தகைய நிறுவனங்களை நடத்தும் முயற்சிகளை இந்த அரசு அண்மைக் காலத்திலே ஏற்றுக்கொள்வதில்லை.

Treatment service for T.B. patients

* 30 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to give domiciliary service to T.B. patients in all the districts in the State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தமிழ்நாட்டில் 1963 ஆம் ஆண்டிலிருந்து செயலிலுள்ள காச நோய்க் கட்டுப்பாடு தேசீயத் திட்டத்தின் கீழ், மாவட்டங்கள் அனைத்திலும் காச நோயாளிக்கு அவரவர்களின் வீடுகளில் இருந்தவாறே சிகிச்சை அளிக்கப் படுகிறது.

(இ) காசநோய்க் கட்டுப்பாடு தேசியத் திட்டத்தின் கீழ் காச நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று சிகிச்சை அளிக்கின்ற முறையின் மூலம் மட்டுமே பெருவாரியான நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க முடியும்; அரசு மருத்துவ நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அனைத்தும் காசநோய்க் கட்டுப் பாடு மாவட்ட அதிகாரியின் தலைமையில் காசநோய்க் கட்டுப்பாடு திட்டத்தில் பங்கு ஏற்று செயல் புரிந்து வருகின்றன. கிராமப் பகுதிகளில் காச நோயாளிகளுக்குக் காசநோய் எதிர்ப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : சார், 1963 ஆம் ஆண்டிலிருந்தே காச நோயாளிகளுக்கு அவர்கள் வீட்டிலேயே வைத்திய வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன் ஞர்கள். ஆனல் இப்போது அந்த வைத்திய வசதி மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த வியாதியும் அதிகமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. பல ஆஸ்பத்திரிகளில் போதுமான வைத்தியம் செய்ய மருந்து கிடைப்பது இல்லை. தனிப்பட்ட நோயாளிகள் அங்கு வந்து வைத்தியம் பெற அதிகம் செலவாகிறது. இந்தக் கஷ்டத்தைப்போக்க 'மொபைல் வான்ஸ்' வைத்து 10 மைல் சுற்றளவுக்குள் இருக்கிறவர்களுக்கு அங்கே சென்று மருந்து கொடுப்பது மட்டுமல்லாமல் மற்ற வசதிகளும் செய்து கொடுத் தால் சிறப்பாக இருக்கும். பெருந்துறை சானடோரியம் முக்கிய மான ஒன்று. அதற்கு இப்போது போதுமான பணம் இல்லை. அதற்குச் சர்க்கார் வருஷம் 3 அல்லது 4 லட்சம் ரூபாய் மானிய மாகக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா? இல்லை என்றால் இனி மேலாவது அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கிராமங்களிலுள்ள மக்களுக்கு நடமாடும் மருத்துவமனை ஏற்படுத்தப் பொருளாதார வசதி இப்போது இல்லை. பி.ஸி.ஜி. வழங்க நடமாடும் மருத்துவ மனைபோல மொபைல் யூனிட்—பரவலாக ஏழு வயதிற்குட்

1975 அக்டோபர் 24]

பட்டவர்களுக்கு—அவர்களுக்குக் காசநோய் வராமலேயே தடுப்பதற்கான — பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் ஊசிபோடப்பட்டு, ஓரளவு ஒரு சுற்று வந்திருக்கிறது. எல்லா மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருந்து ரெகுலர் டிஸ்பென்சரி வரையில் காசநோய் சிகிச்சைக்கான மருந்துகள் வழங்குவது பரவலாக்கப்பட்டிருக்கிறது. படுக்கைகளைக் கொண்ட காசநோய் சிகிச்சை இல்லங்கள் அமைக்கப்பட்டு, அவை மாவட்ட ஆட்சித் தலைவரால் குழுக்கள் அமைக்கப்பட்டு — அவற்றின் நிர்வாகத்தைக் கவனிக்கிறார்கள். அவற்றுக்கு அவசியமாகிற அரசாங்கத்தின் உதவி (கிராண்டு) அளிக்கப்படுவதோடு வேறு உதவிகள் அளிப்பதுபற்றியும் அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு அளிக்கப்படுகிறது. நமது மாநிலத்தில் காச நோய்க்காரர்களுக்குச் சிகிச்சை அளிப்பது நடைமுறைப் படுத்தப்படாமல் இல்லை.

நமது மாநிலத்தில் 7 லட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என்கிற விவரம் பத்து ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட புள்ளி விவரம். அது இன்னும் மாறவில்லை. காரணம் முன்பே காசநோயால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடியவர்களைப் பற்றிய புள்ளிவிவரம் சரியான முறையில் சேகரிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. காசநோய் இல்லாதவர்களுக்குக் கூட ஓரளவு அந்த நோய் இருப்பது போன்ற அடையாளம் தோன்றுகிறது. ஆறு மாதம் மாத்திரை சாப்பிட்டால் மாறுகிறது. இப்படி ஓப்ளக்சு வேட்டிங் நிலைமையில் இருப்பதால், ஜனத்தொகை பெருக்கத்திற்கேற்ப, இப்போதும் 7 லட்சம் பேர்கள் இருக்கலாம் என்றே வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. என்றாலும் தமிழகத்தில் காசநோயைத் தடுத்து, சிகிச்சை அளிக்கும் பணி வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதை, இங்கேயுள்ள மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த அலுவலர்களே ஏற்றுக்கொள்கிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை: காசநோயைத் தடுக்க, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே படுக்கை வசதியுள்ள மருத்துவமனைகளை ஏற்படுத்தி, காச நோயாளிகள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சைபெற ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1975 அக்டோபர் 24

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொன்னுமலை முழுவதும் பணமாக இருந்தால் அந்த ஏற்பாட்டைச் செய்யலாம். ஆறு படுக்கைகள் உள்ள இடத்தில் இன்னொரு படுக்கையை ஏற்படுத்தக் கூட அகில இந்திய தன்மையில் பொருளாதார வசதியில்லை என்று மறுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மருத்துவமனைகளில் உள்ள எல்லாப் படுக்கைகளையும் சேர்த்தால் 23 ஆயிரம் படுக்கைகள்தான் இருக்கின்றன. மற்ற மாநிலங்களின் விகிதாசாரத்தோடு ஒப்பிடு கிறபோது இது அதிகம். இவற்றில் ஏறத்தாழ 3,200 படுக்கைகள் காசநோய்க்காரர்களுக்கு என்று இருக்கின்றன — நான் சொல்லுகிற புள்ளிவிவரத்தில் ஒன்றிரண்டு வேற்றுமை இருக் கலாம் — தேவைக்கேற்ப அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படு கிறது. நாம் 7 லட்சம் பேர்களுக்கு சிகிச்சை வழங்கியாக வேண்டும். 5 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் முறையாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆகையால் காசநோயைத் தடுக்க, வந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்க இப்போதே எல்லா ஏற்பாடு களும் செய்யப்பட்டிருக்கின்றன. காச நோயைப்பற்றி ஆராய்ச்சி நடத்துகின்ற ஒரு தனி நிலையம் — சென்னையில் இருக் கிறது. அவர்களே கூட

'Domiciliary treatment is the best opportune treatment for all the patients who are suffering from T.B.'

என்ற கருத்தை புள்ளிவிவரத்தோடு— ஆதாரத்தோடு — ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். காசநோய்க் காரர்கள் படுக்கையில் இருந்துதான் சிகிச்சை பெறவேண்டுமென்ற நிலைமை 25 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது. இப்போது சல்ஃபாடைசின் மருந்துகள் எல்லாம் கண்டுபிடித்த பிறகு— வீட்டில் இருந்தே, குழந்தைகளுடன், மற்றவர்களுடன் இருந்து கொண்டே இந்த மாத்திரைகளைச் சாப்பிட்டுக்கொண்டு வந்தாலே இந்த நோயில் இருந்து விடுபட முடியும். வீட்டில் இருக்கும்போது இந்த நோய் மற்றவர்களுக்குப் பரவாது இருக்க—கண்ட இடத்தில் துப்புதல், இருமுதல் போன்று இல்லாது கவனித்துக்கொண்டு வந்தாலே போதும். வீட்டில் இருந்தே சிகிச்சை பெறலாம். காசநோய் தோன்றக்கூடிய — அதுசம்பந்தமான அடையாளம் ஏற்படுகிற சமுதாய நிலை இருக்கிறது. வீட்டில் இருந்து கொண்டே அந்த நிலையில் சிகிச்சைபெறுவது மிகவும் பொருத்தம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.